**அசல் வழக்கு எண்: 61/2022**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 04th day of February 2026
வா.சா.1. எலத்திரியான், த/பெ. எத்திராஜ்,

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது தந்தை வா.சா.ஆ.7 தான செட்டில்மெண்ட் பத்திரம் என் பெயரில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அப்போது நான் மைனர் என்றால் சரிதான். நான் எனது தந்தை எத்திராஜ் கவுண்டர் கூட தான் வசித்து வந்தேன் என்றால் சரிதான். அதன் பின்னர் என் பெயரில் உள்ள தான பத்திரத்தை ரத்து செய்துவிட்டு எனது தந்தை எனது பெரியம்மா எல்லம்மாள் பெயரில் 4 சர்வே சொத்துக்களை பொருத்து செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் அது எனக்கு தெரியாது. தற்போது அது குறித்து தெரிந்தவுடன் மேற்கண்ட ஆவணத்தை வா.சா.ஆ.15 ஆக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு 2016 ம் வருடம் போளூர் மாவட்ட உரிமையல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 267/2016 இருந்து சம்மன் வந்த போது தான் எனது பெரியம்மா பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் குறித்து எனக்கு தெரியவந்தது. மேற்கண்ட வழக்கில் அ–அட்டவணை சொத்துக்களில் சுமார் 10 அயிட்ட சொத்தை பொருத்து விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் எனக்கு அது தெரியாது. அதே வழக்கில் ஆ–அட்டவணை சொத்தை பொருத்து தங்களுக்கு மட்டுமே சொந்தம் என விளம்புகை பரிகாரம் கோரியிருந்தார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த வழக்கில் நான் என்னுடைய எதிருரையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த எதிர்வழக்குரையில் எனது தந்தை இறக்கும் வரை யாருக்கும் எந்த சொத்தும் எழுதி வைத்தது இல்லை என 7 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் நான் எனக்கு தான செட்டில்மெண்ட் மூலம் வழக்கு சொத்து பாத்தியமானது என்று குறிப்பிட்டுள்ளது தான் சரியானது ஆகும். அந்த வழக்கின் பதில் உரையை வா.சா.ஆ.13 ஆக இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தை உயிருடன் இருந்த வரை அவர் தான் இந்த சொத்துக்களை பொருத்து பயிர் செய்து வந்தார் என்றால் சரியல்ல. அவருக்கு வயதாகிவிட்டதால் நானும் எனது அம்மாவும் தான் பயிர் செய்து வந்தோம். அவர் இறப்பதற்கு சுமார் 20 வருடங்களுக்கு முன்பு இருந்தே உடல்நிலை சரியில்லாததால் பயிர் செய்ய இயலவில்லை. எனது தந்தை வயது முதிர்வு மற்றும் கால் அடிப்பட்டு நடக்க இயலாமல் போனதால் அவரால் பயிர் செய்ய

இயலவில்லை. எந்த வருடம் அடிப்பட்டது என ஞாபகம் இல்லை. அதற்கு நாட்டு மருந்து சிகிச்சை தான் எடுத்து கொண்டோம். யாரிடம் எத்தனை வருடங்கள் சிகிச்சை எடுத்து கொண்டார் என்று எனக்கு தெரியாது. எனது தந்தை சிகிச்சை எடுத்து கொண்டது சம்மந்தமாக ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பெரியம்மா தான செட்டில்மெண்ட் பெற்றவுடன் அந்த சொத்தை பொருத்து அவர் தான் பயிர் செய்து அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. நான் தான் பயிர் செய்து வந்தேன். நான் 2010 ம் வருடம் 12 ம் வகுப்பு படித்தேன். எனது தந்தை 2016 ம் வருடம் காலமானார். எனது அக்கா சுள்ளி 2021 ம் வருடம் எனக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்றும் அதில் 24.01.2021 ம் தேதி பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. செம்மியமங்களம் மதுரா, ராந்தம் கிராமத்தில் லேட்.எத்திராஜ் கவுண்டர் மகன் எலத்திரியான் என்று நான் மட்டும் தான் என்றும் வேறு யாரும் கிடையாது என்றால் சரிதான். உண்மையில் அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்டு தற்போது வழக்கிற்காக மறுத்து கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் மனைவி பெயர் தீபா ஆகும். எனது மனைவி பெயருக்கு தாவா சொத்துக்களை பொருத்து ஒரு செட்டில்மெண்ட் செய்துள்ளேன் என்றால் சரிதான். எப்போது என்று ஞாபகம் இல்லை. சுமார் இன்றையில் இருந்து 5 வருடங்களுக்கு முன்னர் அவ்வாறு மாற்றியிருக்கேன். எந்த சர்வே எண்ணில் எவ்வளவு இடங்கள் நான் அவ்வாறு மாற்றம் செய்திருப்பேன் என ஞாபகம் இல்லை. அவ்வாறு எழுதப்பட்ட போது தான் எனது அக்கா சுள்ளி எனக்கும் சார்பதிவாளருக்கும் அறிவிப்பு அனுப்பினார் என்றால் எனக்கு தெரியாது. 07.05.2021 ம் தேதி எனது அக்கா சுள்ளி நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது தாவா நிலங்களை அளக்க கூடாது என காவல் துறையில் என்மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த புகாரின் அடிப்படையில் காவல் துறையினர் என்னையும் சுள்ளியையும் அழைத்து விசாரித்தார் என்றால் சரியல்ல. எனது பெரியம்மா எல்லம்மாள் 2019 ம் வருடம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் அப்போது என்னுடன் சொத்து தகறாறு செய்து வந்ததால் இந்த வழக்கில் அவரை 1ம் பிரதிவாதியாக சேர்த்தேன். இந்த வழக்கு 05.08.2020 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். தற்போதைய தாவா சொத்துக்களும் மாவட்ட உரிமையில் நீதிமன்ற அசல் வழக்கு எண் 267/2016 வழக்கு சொத்து இரண்டும் ஒரே சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது

என்றால் சரிதான். அந்த வழக்கு குறித்து உயர் நீதிமன்றத்தில் தெரிவித்து இரண்டு வழக்குகளையும் சேர்த்து நடத்த நான் முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஏற்கனவே மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் தாவா சொத்துக்களை பொருத்து வழக்கு இருப்பதை மறைத்தும் அதில் சொல்லியுள்ள விவரங்களுக்கு முன்னுக்கு பின் முரணான விஷயங்களை குறிப்பிட்டு பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நானும் எனது அம்மாவும் தாவா சொத்துக்களை பொருத்து வா.சா.ஆ.9–ஐ தவிர்த்து தொடர்ச்சியாக நாங்கள் தான் பயிர் செய்து வந்தோம் என்பதற்கு வேறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொருத்து எனக்கு எந்த உரிமையும் இல்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/– S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |